ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1688/30 - 2011 ජනවාරි 14 වැනි සිකුරාදා - 2011.01.14
*1688/30 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 115/13/01/13.
காணி அமை. இல. : 13/99/விஈ/257.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

கேகாலை மாவட்டம், மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில், தும்பலாதபற்று கிழக்கு பிரிவிலுள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட வரைபடம் அ. வ. கே. 2779 என்னும் இலக்கம் கொண்ட 01, 02 மற்றும் 03 எனக் காட்டப்பட்டுள்ள காணியின் விபரங்கள் பின்வருமாறு :

***01. துண்டு இல. 01***
காணியின் பெயர் : அம்புளுவாவ வத்த ; உரிமை கோருபவர் : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ; விஸ்தீரணம் : 20.124 ஹெக்டயார்ஸ்.

***02. துண்டு இல. 02***
காணியின் பெயர் : அம்புளுவாவ வத்த ; உரிமை கோருபவர் : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ; விஸ்தீரணம் : 0.247 ஹெக்டயார்.

***03. துண்டு இல. 03***
காணியின் பெயர் : அம்புளுவாவ வத்த ; உரிமை கோருபவர் : எச். எம். எம். ராசிக், அம்புளுவாவ வத்த, சிங்கபிடிய, கம்பளை ; விஸ்தீரணம் : 2.462 ஹெக்டயார்ஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி மு.ப. 8.30 மணிக்கு மாவனல்லை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. டபிள்யு. ருக்மணி ஆரியரத்ன,
பிரதேச செயலாளர்,
மாவனல்லை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மாவனல்லை,
2011.01.07.

01 - 701